# இரண்டாம் இடைத்தேர்வு - 2024

8- ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

பதிவு எண் 8013

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

குறிப்புகள் :

1. மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப் பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
2. விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
3. தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **7 X 1 = 7**

1. நாளந்தாவை உலகப் பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது?

   அ) 2006 ஆ) 2007 இ) 2008 ஈ) 2009

2. காலங்காலமாக ஒரங்கட்டப்பட்டிருந்த சமூகப் பெண்களுக்கெனப் பள்ளி ஒன்றை நிறுவியவர் யார்?

   அ) ஜோதி பா புலே ஆ) ராஜாராம் மோகன்ராய் இ) கேசவ சந்திர சென் ஈ) சர் சையது அகமது கான்

3. பருவமழை பொய்ப்பின் காரணமாக ..........ஏற்படுகிறது.

   அ) ஆவி சுருங்குதல் ஆ) வறட்சி இ) ஆவியாதல் ஈ) மழை பொழிவு

4. காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம் ........

   அ) 78.09% ஆ) 74.08% இ) 80.07% ஈ) 76.63%

5. அமுல் பால் பண்ணைத் தொழிலகம் ........துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

   அ) தனியார் ஆ) பொதுத் இ) கூட்டுறவுத் ஈ) கூட்டுத்

6. உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?

   அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10 இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

7. தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

   அ) புது டெல்லி ஆ) மும்பை இ) அகமதாபாத் ஈ) கொல்கத்தா

### பகுதி - ஆ

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [வினா எண் 14 கட்டாய வினா].** **5 X 2 = 10**

8. காந்தியடிகளின் வார்தா கல்வித் திட்டம் என்றால் என்ன?
9. நாளந்தா பல்கலைக் கழகம் பற்றி உங்களுக்கு தெரிவது யாது?
10. பொருளாதார நடவடிக்கை என்றால் என்ன?
11. இடர் – வரையறு.
12. *வேறுபடுத்துக.*

    இரண்டாம் நிலைப் பொருளாதாரச் செயல்பாடு மற்றும் மூன்றாம் நிலைப் பொருளாதாரச் செயல்பாடு.
13. பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்கான நிறைவேற்றப்பட்ட ஏதேனும் இரு சட்டங்களை குறிப்பிடுக.
14. கல்வி உரிமைச்சட்டம் பற்றி எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - இ

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் [வினா எண்.21 கட்டாய வினா]

5 X 5 = 25

15. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) முதல் இடைநிலைக்கல்விக் குழுவின் தலைவர் ............ ஆவார்.

(ii) மனித உரிமைகள் என்பது .......... உரிமைகள்.

(iii) இடர்கள் ............. க்கு வழி வகுக்கிறது.

(iv) வங்கித்துறை என்பது ............ பொருளாதார நடவடிக்கையாகும்.

(v) இந்திய அரசியலமைப்பின் 42 வது சட்டப்பிரிவு .......... ஐ தடை செய்கிறது.

16. சரியா/தவறா எனக் குறிப்பிடுக.

(i) உப-நி-ஷத் என்ற சொல்லுக்கு, ஒருவருக்கு அருகில் உட்காருதல் என்று பொருள். X

(ii) நாளந்தா ஒரு சிறந்த வேதக்கல்வி மையமாக இருந்தது. ✓

(iii) பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது. ✓

(iv) மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை. X

(v) குழந்தைகள் உதவிமைய எண் 1098 ஆகும். ✓

17. கோத்தாரி கல்விக் குழுவின் முக்கியமான பரிந்துரைகளைச் சுட்டி காட்டுக.

18. நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க.

19. தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக.

20. மனித உரிமைகளின் ஏதேனும் ஐந்து அடிப்படைப் பண்புகளை விவரி.

21. காற்று மாடுபடுதலைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

பகுதி - ஈ

பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

2 X 4 = 8

22. அ) சமண, பௌத்த மடாலயங்களில் கல்வியின் முக்கியக் கூறுகளைப் பற்றி விவாதிக்க.

(அல்லது)

ஆ) குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?

23. அ) பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1) டெல்லி

2) லக்னோ

3) விக்ரமசீலா

4) வார்தா

(அல்லது)

ஆ) பின்ரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1) ஏதேனும் ஒரு நில அதிர்வு மண்டலம்

2) ஏதேனும்ஒரு வெள்ளப்பெருக்கு பகுதி

3) சூறாவளியால் பாதிக்கப்படும் ஒரு பகுதி

4) வறட்சியால் பாதிக்கப்படும் ஒரு பகுதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com